



<u>மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - மதுரை மாவட்டம்</u>

<u>மதுரை உள்ளூர் திட்டக் குழுமம்</u>

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், திருமங்கலம் நகராட்சி, செங்குளம் கிராமம், வார்டு-A, பிளாக்-8, நகர அளவு எண்கள்: 12/55, 56 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

(விரிவு அபிவிருத்தி திட்டமில்லாப்பகுதி)

கோப்பு எண் : 9197/2022/SWP-OG7DK7ZC

அளவு : 1:400

வ

<u>குறிப்புகள்:</u>

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு | = | 1.0948 ஏக்கர் (4432ச.மீ) |
| மனைப்பிரிவு இடத்தின் எல்லை | = | |
| நிலையிலுள்ள சாலை | = | |

<u>விற்பனைக்குரியவை:</u>

| | | |
|---|---|---|
| கோரிய மனைகளின் எண்ணிக்கை | = | 22 எண்ணம் |
| <u>ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை:</u> | = | 22 எண்ணம் |

<u>பொது ஒதுக்கீடு:</u>

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு | = | 4432.00ச.மீ |
| உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு | = | 1749.36ச.மீ |
| மீதமுள்ள இடத்தின் பரப்பளவு | = | 2682.64ச.மீ |

<u>பொது உபயோகம்:</u> (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டது).

| | | |
|---|---|---|
| உள்ளாட்சி உபயோகத்திற்கு | = | 14.46ச.மீ (0.82%) |
| தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மான கழக (TANGEDCO) உபயோகத்திற்கு. | = | 14.42ச.மீ (0.82%) |

(அரசாணை எண்:18, ந.நி.(ம)கு.வ(ந.ப.1)துறை நாள்:04.02.2019, விதி-47(6)-ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019-பிஏ2, நாள்:05.02.2020, CASE-IV-ன்படி பூங்கா பரப்பளவு - 270.00ச.மீ ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மேற்கண்ட பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கான வழிக்காட்டி மதிப்பீடு தொகையினை மனுதாரர் செலுத்தியுள்ளார்.)

<u>கட்டிட வரம்பு:</u>

<u>முன்பக்க திறவிடம்:</u>

9.00மீ அகலம் வரை உள்ள சாலைகளுக்கு 1.50மீ விடப்பட வேண்டும்.

9.00மீ அகலம் முதல் 12.00மீ அகலம் வரை உள்ள சாலைகளுக்கு 3.00மீ விடப்பட வேண்டும்.

<u>மூலை முடக்கு</u>

12.00மீ அகலம் வரை உள்ள சாலைகளுக்கு 1.50மீ x 1.50மீ விடப்பட வேண்டும்.

<u>நிபந்தனைகள்:</u>

1. அரசாணை எண்:18, ந.நி.(ம)கு.வ(ந.ப.1)துறை நாள்:04.02.2019, அரசாணை எண்:16 ந.நி.(ம)கு.வ (ந.ப.1)துறை நாள்:31.01.2020-ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367∴2019-பிஏ2, நாள்:05.02.2020 மற்றும் அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை. நாள்.09.12.2020-ன்படி உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலை, பொது உபயோகத்தினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் உபயோக ஒதுக்கீட்டினை மின்சார வாரியத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்காண் அரசாணைகளின் படி உத்தேச சாலைகளை நிர்வாக அதிகாரியால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும், அகலத்திற்கும் தார் சாலையாகவும், தேவையான அடிப்படை வசதிகளை இடத்தில் மனைப்பிரிவு உரிமையாளரால் அமைக்கப்பட்ட பின் அதனை உள்ளாட்சியால் உறுதி செய்து கொண்டு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.

2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன், இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. இம்மனைப்பிரிவு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் (ம) சான்றுகள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது இம்மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதலானது எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை, அவர்களால் ரத்து செய்யப்படும்.

4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6“ஓ4“ -அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

6.The Tamilnadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Dept Dated: 22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise, Market, Book, Sell or Offer for Sale , or Invite persons to purchase in any manner, any plot, any apartment or Building, as the case may be in Real estate project or part of it only after registering the real estate project with the Real estate Regulatory Authority.

<u>குறிப்பு:</u> அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடபட்டுள்ளது.

**ம.வ/ம.உ.தி.கு.எண்:147/2023 (இணையதள ஒப்புதல்)**

**திட்ட அனுமதி எண்:149/2023 (இணையதள ஒப்புதல்)**

*Signature Not Verified*

*Signed by: Assistant Director*
*Location:Madurai*
*Date:2023.04.27 17:36:04*

உதவி இயக்குநர் உறுப்பினர் செயலர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை மாவட்டம்.